# சிகரம்

## (வினா – விடை)

**(பட்டவகுப்பு – இரண்டாமாண்டு நான்காம் பருவம்)**

**(B.A., B.Sc. II$^{nd}$ year IV$^{th}$ Semester)**

## 20 BXF 404

ஆசிரியர்

முனைவர் **முரளிஅரூபன்**

துணைப் பேராசிரியர்

தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை

புதுக்கல்லூரி (தன்னாட்சி), இராயப்பேட்டை, சென்னை – 600 014.

21, மேயர் சிட்டிபாபு தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை,

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொடர்பெண்: 94448 87270

kalthachan98@gmail.com ● muraliarooban.blogspot.com

# நற்றிணை

## *பகுதி - அ*

**1. நற்றிணை – குறிப்பு வரைக.**

நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

இதனை 175 புலவர்கள் பாடியுள்ளனர். மொத்தம் 400 பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

இது ஒரு தொகுப்பு நூலாகும். இந்நூலைத் தொகுத்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான்.

நற்றிணைப் பாடல்களில் குறைந்தபட்சம் 09 வரிகளும் அதிக பட்சம் 12 வரிகளும் இடம் பெற்றிருக்கும்.

## *பகுதி - ஆ*

**2. நற்றிணையில் இடம்பெறும் தோழியானவள் தலைவனிடம் யாது கூறினாள்?**

புத்தம் புதிய இசைக்கலைஞர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களின் இசையோ மெல்லிசை ஆகும். அந்த மெல்லிசையைப் போன்று வெள்ளைநிற வலம்புரிச் சங்கில் ஓசை எழுகிறது. இத்தகைய நீர்வளம் பொருந்திய நெய்தல்நிலத் தலைவனே!

ஆட்டம் பாட்டம் போடும் தோழிகளுடன் புன்னைமர விதையை மணலில் புதைத்தோம். பின்னர் அதனை மறந்தே போய்விட்டோம். பிறகு அந்த விதை முளைக்கத் தொடங்கியது. நாங்கள் அதற்கு நெய் கலந்த பாலை ஊற்றி இனிதாக வளர்த்தோம்.

‘இந்தப் புன்னைமரம் உங்களுக்குத் தங்கை முறையாகும். உங்களைவிடச் சிறந்தது’ என்று அன்னை எங்களிடம் கூறி இருக்கிறாள்.

இப்படித் தங்கை முறையாக வளர்ந்துள்ள இந்தப் புன்னை மரத்தின்கீழ் உங்களோடு சிரித்துப் பேசுவது வெட்கமாக உள்ளது. நீங்கள் ஒப்புக்கொண்டால் நிழல் தரும் வேறு மரங்களிடம் செல்வோம் என்று தலைவனிடம் தோழி கூறினாள்.

தலைவன் விரைவாக வந்து தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைத் தோழி இவ்வாறு மறைமுகமாகக் கூறினாள்.

**3. தலைவியின் சம்மதம் பெறுவதற்காகத் தலைவன் எப்படியெல்லாம் பேசினான்?**

தலைவியைப் பார்த்துத் தலைவன் பின்வருமாறு கூறினான்:

“நான் உன்னைக் காதலிக்கிறேன். இது ஒருதலைக் காதலாக உள்ளது. இந்தக் காதல் என்னை மடல் ஏறச் செய்தது. (மடல் ஏறுதல் என்றால் குதிரை மீது வருவதைப் போன்று பனை மட்டையில் அமர்ந்துகொண்டு தலைவியின் இருப்பிடத்தைச் சுற்றி வருதல்.)

என்னைப் பற்றி ஊர் மக்கள் ஜாடைமாடையாகப் பேசுகிறார்கள். இந்தப் பேச்சு எனக்கு எருக்கம் பூக்களால் ஆன மாலையைத் தந்தது. பரந்து விரியும் சூரிய ஒளி தணிந்து குறைந்தது, இது எனக்குத் துன்பத்தைக் கொடுத்தது. வடதிசைக் காற்றோ பனித்துளிகளைத் தூவியது.

ஆண் இனத்தைச் சேர்ந்த அன்றில் பறவை தனது பெட்டையைப் பிரியாமல் குரலெழுப்பிக் கொண்டு இருந்தது.

இரவுப் பொழுதோ என்னை இயங்காமல் செய்துவிட்டது.

போவோர் வருவோர் எல்லாம் என்னைப் பரிதாபமாகப் பார்க்கிறார்கள்.

இப்படித் துன்பங்களும் துயரங்களும் என்னைச் சூழ்ந்துள்ளன.

இந்த நிலையில் இருந்து நான் எப்படி மீண்டு வருவேன்” என்றெல்லாம் தலைவன் கூறினான்.

**4. தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிய தோழியிடம் தலைவி யாது கூறினாள்?**

மாமரக் கிளைமீது கொக்கு ஒன்று அமர்ந்தது. இதனால் அசைவுற்ற கிளையில் இருந்து மாங்கனி விழுந்தது.

குவிந்த நிலையில் இருக்கும் கொக்கின் தோற்றத்தைப் போன்று ஆம்பல் மலர் மொட்டுகள் இருந்தன. இத்தகைய மொட்டுகள் உள்ள குளத்தில்தான் அந்த மாங்கனி விழுந்தது.

இப்படிப்பட்ட நீர்வளமிக்க பகுதிகளையுடைய ஊரைச் சேர்ந்த தலைவன் என்னைவிட்டு நீங்கி விலைமகளிரோடு சேர்ந்துள்ளான். அவனது செய்கையைக் கண்டும் கோபப்படாதே என்கிறாய். நானும் கோபப்படவில்லை.

நெல் வயலில் உள்ள ஆமையின் முதுகுப் பகுதி பாறை போன்று இருக்கும்.

வயல்வெளியைக் காவல் காக்கும் உழவர்கள் அத்தகைய முதுகின்மேல் நத்தையை உடைத்துத் தின்பார்கள். இப்படிப் பழமைமிக்க ஊராகக் குன்றூர்த் திகழ்கிறது.

இது வேளிர் மன்னருக்கு உரியது.

இப்படிப்பட்ட குன்றூரைப் போன்றது என் வீடு. இத்தகைய வீட்டுக்கு வரும் விருந்தினரை உபசரிப்பதில் ஈடுபட்டுள்ளதால் அவன் மீது நான் கோபப்படவில்லை.

இவ்வாறு தலைவன் மீது கோபமில்லை எனச் சொன்னாலும் தலைவனது தீய செய்கையால் தலைவி கோபத்தோடே இருந்தாள். இதனைக் குறிப்பாக உணர்த்துகிறாள்.

# குறுந்தொகை

### *பகுதி - அ*

**1. குறுந்தொகை – குறிப்பு வரைக.**

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

இதில் 402 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை 205 புலவர்கள் பாடியுள்ளனர்.

குறுந்தொகைப் பாடல்களில் குறைந்தபட்சம் 4 வரிகளும் அதிகபட்சம் 8 வரிகளும் இடம் பெற்றிருக்கும்.

இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை. தொகுக்கச் சொன்னவர் பூரிக்கோ என்பவர் ஆவார்.

### *பகுதி - ஆ*

**2. தன்னைத் திட்டிப்பேசிய தோழனுக்குத் தலைவன் கூறிய மறுமொழி யாது?**

வெயிலில் காய்ந்து சூடேறிய பாறைமேல் வைத்த வெண்ணெய் உருகி வழிகிறது.

கைகள் இல்லாத ஊமை ஒருவன் அதைப் பாதுகாக்க நினைப் பதைப் போல காதல் உணர்வால் எனது உடம்பு மெலிந்து வருகிறது.

என்னைத் திட்டிப்பேசும் நண்பனே! இதனைத் தடுக்கும் வகையில் உனது பேச்சு அமைந்தால் நல்லது. இந்த நற்செயலைவிடப் பெரிய செயல் எதுவும் இல்லை.

இவ்வாறு தலைவன் தன் தோழனிடம் மறுமொழி கூறினான்.

**3. பணம் சம்பாதிக்க சென்ற தலைவன் தனது நெஞ்சுக்குக் கூறியன யாவை?**

காட்டுக் குறவர் பெற்றெடுத்த தலைமகள் தோற்றப் பொலிவுடன் காணப்படுகிறாள். அவளது உடலழகு மனம் கவரும் வகையில் அமைந்துள்ளது.

அமுதம் உண்டவர்க்கு நோய் வராது. முதுமை வராது. மரணமும் வராது. இத்தகைய அமுதமாக இருக்கிறாள்.

ஐந்து புலன்களுக்கும் இன்பம் தரும் செல்வமாகவும் இருக்கிறாள்.

இத்தகைய தலைவியைவிட்டுப் பிரிவது இயலாத காரியம் என்று தலைவன் தனது நெஞ்சிடம் கூறினான்.

**4. தலைவியின் இல்லறச் சிறப்பினைச் செவிலித்தாய் எங்ஙனம் வியந்து கூறினாள்?**

தலைவி தூய்மையான ஆடையை அணிந்திருந்தாள். அவளது கைவிரல்கள் செங்காந்தள் மலர் போன்றவை. இத்தகைய கைகளால் கட்டித் தயிரைப் பிசைந்து கொண்டிருந்தாள். பின்னர் உணவைத் தாளிப்பதற்காக எழுந்தாள். இவ்வாறு எழுந்தவளின் ஆடை நெகிழத் தொடங்கியது. தயிரைப் பிசைந்த கையோடு தனது ஆடையைச் சரிசெய்து கொண்டாள்.

இவ்வாறு தானே முன்னின்று செய்து பரிமாறிய புளிக்குழம்பைப் புகழ்ந்து உண்டான் தலைவன். இதனைக் கண்ட தலைவி முகம் மலர மனம் மகிழ்ந்தாள்.

# II. இலக்கணம்

**(1) ஓர் எழுத்து ஒருமொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.**

எழுத்துகள் சேர்ந்து வந்தால் சொற்கள் உண்டாகும். அவை பொருள் தரும்.

தமிழில் ஓர் எழுத்தே சொல்லாக நின்று பொருள் தருவதும் உண்டு. அதனை ஓர் எழுத்து ஒரு மொழி என்பார்கள்.

'ஆ' என்பது ஓர் எழுத்து; இதற்குப் பொருள் உண்டு. பசு என்பது இதன் பொருள்.

எடுத்துக்காட்டு : ஆவின் பால்.

இதனைப் போல மா என்பதும் ஓர் எழுத்து. மாமரம், வண்டு, பெரியது முதலிய பொருள் இதற்கு உண்டு.

**(2) சொற்றொடர் என்றால் என்ன?**

பொருள் தரும் வகையில் சொற்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட அமைப்பில் வருவதே சொற்றொடர் ஆகும். ஒரு சொற்றொடரின் இன்றியமையாத உறுப்புகள் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகியவை ஆகும்.

எடுத்துக்காட்டு:

மாணவன் பாடங்களைப் படித்தான்

| | | |
|---|---|---|
| மாணவன் | - | எழுவாய் |
| படித்தான் | - | பயனிலை |
| பாடங்கள் | - | செயப்படுபொருள் |

செயல்படு பொருள் இல்லாமலும் சொற்றொடர் அமையலாம்.

(எ-டு) மாணவன் படித்தான்.

**(3) தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொடர் இரு வகைப்படும்.

(1) பெயர்த் தொடர்

(2) வினைத் தொடர்

### (1) பெயர்த் தொடர்

ஒரு பெயர்ச்சொல்லைத் தலைமையாகக் கொண்டிருப்பது பெயர்த்தொடர் எனப்படும். இதனை எழுவாய்ப் பெயர்த்தொடர் என்றும் அழைப்பர்.

எடுத்துக்காட்டு: அழகான பெண்

அழகான என்னும் அடையைப் 'பெண்' என்னும் பெயர்ச்சொல் பெற்று வந்துள்ளது. எனவே, இதனைப் பெயர்த் தொடர் எனலாம்.

### (2) வினைத் தொடர்

ஒரு வினைச்சொல்லை முதன்மையாகக் கொண்ட தொடர் வினைத்தொடர் ஆகும். இதனோடு ஒன்றோ பல அடைகளோ வரலாம்.

எடுத்துக்காட்டு: வேகமாக ஓடினாள்.

இதில் ஓடினாள் என்னும் வினைச்சொல் முதன்மையாக அமைந்துள்ளது.

**(4) சொற்றொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தனிச் சொற்றொடர், தொடர் சொற்றொடர், கலவை சொற்றொடர் எனச் சொற்றொடரை மூவகைப்படுத்துவர்.

**(5) தனிச்சொற்றொடர் என்றால் என்ன?**

ஓர் எழுவாயோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்களோ வந்து ஒரே பயனிலையைக் கொண்டு முடிவது தனிச்சொற்றொடர் ஆகும். எழுவாய், செயப்படுபொருள் இன்றியும் தொடர் அமைவதுண்டு.

(எ-டு): பாரதிதாசன் தமிழ் உணர்வை வளர்த்தார்.

ஒரே எழுவாய் வந்து ஒரே பயனிலையைக் கொண்டு முடிந்தது.

சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் தமிழை வளர்த்தனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் வந்து ஒரே பயனிலையைக் கொண்டு முடிந்தது.

**(6) தொடர் சொற்றொடர் என்றால் என்ன?**

தனிச்சொற்றொடர்களில் பல தொடர்ந்து வருவதும், ஒரு எழுவாய் பல பயனிலைகளைப் பெற்று வருவதும் தொடர் சொற்றொடராகும்.

(எ-டு) பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; வணக்கம் செலுத்துங்கள்.

தனிச் சொற்றொடர் தொடர்ந்து வந்தன.

பாரி வள்ளல்களுள் தலைசிறந்தவன்; புலவர்களைப் புரக்கும் புரவலன்; இரவலர்க்கு இன்னுயிர் நல்கும் பண்பினன்.

ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிந்தது.

**(7) கலவை சொற்றொடர் என்பது யாது?**

ஒரு தொடர் ஒரு துணை சொற்றொடருடன் சேர்ந்தோ ஒன்றுக்கு மேற்பட்ட துணைச் சொற்றொடருடன் சேர்ந்தோ வருவது கலவை சொற்றொடராகும்.

(எ-டு) திருவள்ளுவர், ஒவ்வொருவரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பவேண்டும் என்று கூறியுள்ளார்.

இச்சொற்றொடரில் திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பது முதன்மை சொற்றொடராகும். ஒவ்வொருவரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பவேண்டும் என்பது சார்பு சொற்றொடராகும். ‘என்று’ என்பது முதன்மை சொற்றொடரையும் சார்பு சொற்றொடரையும் இணைக்கும் சொல்லாகும். ஒரு முதன்மை சொற்றொடர் ஒரு துணை சொற்றொடருடன் இயைந்து வந்த கலவை சொற்றொடராகும்.

தேர்வில் வெற்றிபெற வேண்டுமானால் தவறாமல் பள்ளிக்கு வரவேண்டும் என்றும், ஆசிரியர் கற்பிப்பதைக் கவனிக்க வேண்டும் என்றும், நாள் தவறாமல் படிக்க வேண்டும் என்றும் ஆசிரியர் கூறினார்.

# III. இலக்கிய வரலாறு

**(1) எட்டுத்தொகை நூல்களைக் குறித்து விளக்குக.**

சங்க இலக்கியப் பாடல்கள் ஒரே காலத்தைச் சார்ந்தவை அல்ல. அவை வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு புலவர்களால் பல்வேறு இடங்களில் பாடப் பெற்றவையாகும்.

### நற்றிணை

175 புலர்களால் பாடப்பெற்ற 400 அகப்பாடல்களைக் கொண்டது இந்நூல். இதனைத் தொகுத்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான். நற்றிணைப் பாடல்கள் 9 அடி முதல் 12 அடி வரையில் அமைந்திருக்கின்றன. தமிழரின் வளமார்ந்த அன்பு வாழ்க்கையை இந்நூற் பாடல்கள் நயம்பட கூறுகின்றன. இந்நூலுக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் விளக்கவுரை எழுதியுள்ளார். நற்றிணைப் பாடல்கள் உவமைநலம் மிக்கவை.

### குறுந்தொகை

குறைந்தபட்சம் 4 அடிகளையும் அதிகபட்சம் 8 அடிகளையும் கொண்ட நானூறு பாக்களை உடையது இந்நூல். ஆயினும், குறுந் தொகையில் தற்போது 402 பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூல் பாடல்களை இருநூற்று புலவர்கள் இயற்றியுள்ளனர். குறுந்தொகை யைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை. பூரிக்கோ தொகுக்கச் சொன்னவர்.

இந்நூலில் பழந்தமிழரின் அன்பு வாழ்வு, நகரங்கள், ஊர்கள், மக்களின் பழக்கவழக்கங்கள், மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலிய செய்திகளை உணரலாம்.

### ஐங்குறுநூறு

திணை ஒன்றுக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்திணைகளுக்கும் 500 பாடல்களையுடையது இந்நூல். இந்நூற் பாடல்கள் 3 அடி முதல் 6

அடி வரை அமைந்துள்ளன. இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

அன்பின் நெகிழ்ச்சியைக் கூறும் பல பாடல்களை இந்நூலுள் கண்டு இன்புறலாம்.

### கலித்தொகை

150 கலிப்பாக்களைக் கொண்ட அகப்பொருள் பற்றிய நூல் இது. குறிஞ்சித் திணையைக் கபிலரும், முல்லைத் திணையைச் சோழன் நல்லுருத்திரனும், மருதத் திணையை மதுரை மருதனிளநாகனாரும், நெய்தல் திணையை நல்லுந்துவனாரும், பாலைத்திணையைப் பெருங்கடுங்கோனும் பாடியுள்ளனர்.

### அகநானூறு

13 அடி முதல் 31 அடி வரை அமைந்த 400 அகப்பாடல்களின் தொகுப்பாகும் இந்நூல். இதனை களிற்றி யானை நிரை, மணிமிடை பவளம். நித்திலக் கோவை என மூன்று பிரிவாகப் பிரித்துள்ளார்.

இந்நூலை நெடுந்தொகை என்ற பெயராலும் அழைப்பர். ‘அகம்’ என்ற பெயரும் இதற்குண்டு.

### புறநானூறு

இந்நூல் நானூறு புறப்பாடல்களின் தொகுப்பாகும். இதனைத் தொகுத்தவர் யார் எனத் தெரியவில்லை. பண்டைத் தமிழகத்தைப் பற்றி அறிய விரும்புவோர்க்கு இந்நூலே மிக்க உதவி செய்கிறது. பழந்தமிழ் மன்னரின் வீரம், கொடை ஆகியவற்றையும் மக்களின் வாழ்வியலையும் விளக்கமாகக் கூறுகிறது.

குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் ஆகிய இவர்களுடைய வரலாறுகளைப் பற்றிய குறிப்புகளை நாம் புறநானூற்றில் கண்டுகளிக்கலாம்.

### பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து எட்டுத்தொகையில் அமைந்த ஒரு நூலாகும். பத்துப்பத்து என்பது பதிற்றுப்பத்தின் பொருள். பத்துச் சேர மன்னர்

களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது.

இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை. இதனைப் போன்று தொகுக்கச் சொன்னவர் பெயரும் தெரியவில்லை. இந்நூல் சேர மன்னர்களை மட்டுமே பாராட்டுகிறது.

இந்நூல், பழங்காலத் தமிழக மக்களைப் பற்றியும் சேர மன்னர் களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிகிறது. இதில் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

சேர மன்னர்களுடைய நாட்டுவளம், கொடைச்செயல், மக்கள் வாழ்க்கை, படைத்திறன், மனைமாட்சி முதலியவற்றை இந்நூலால் அறியலாம்.

**பரிபாடல்**

பரிபாடல் அகமும் புறமும் பேச வல்லது. பரிபாடல் என்னும் ஒருவகைப் பாவால் அமைந்ததால் இந்நூல் இப்பெயரைப் பெற்றது; பொருட்சிறப்பு மிகுந்து இருப்பதால் ஓங்கு பரிபாடல் என்னும் அடைமொழியை உடையது. 70 பாடல்களில் 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. பரிபாடலுக்குச் சிற்றெல்லை 25 அடிகள், பேரெல்லை 70 அடிகள். இது இனிமையும் இசையும் பொருந்திய பாக்களால், பாமர மக்களின் இன்ப வாழ்க்கையைப் பற்றியும், சமய வாழ்க்கையைப் பற்றியும் இயல்பு குன்றாமல் சித்தரிக்கின்றது.

இது மதுரை நகர அமைப்பு, வையையின் தோற்றம், திருப்பரங் குன்றம், திருமாலிருஞ்சோலை ஆகியவற்றின் பழைய நிலையையும் சிறப்பையும் தெரிவிப்பதுடன், அக்கால மாந்தர்களின் உணவு முறைகளையும், கடவுளர்களையும், வழிபாட்டு வகைகளையும், வாழ்க்கை முறைகளையும், விழாக்களையும் சிறப்புற எடுத்துக் கூறுகிறது.

●●●

**(2) பத்துப்பாட்டு என்ற தலைப்பில் கட்டுரை வரைக.**

## திருமுருகாற்றுப்படை

இப்பாடலை இயற்றியவர் நக்கீரர்.

ஆற்றுப்படை நூல்களுள் திருமுருகாற்றுப்படை தனிச்சிறப் புடையது ஆகும்.

### பொருநராற்றுப்படை

முடத்தாமக்கண்ணியார் பாடிய இப்பாட்டு 248 அடிகளைக் கொண்டதாகும். ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பொருநர் மூவகைப்படுவர். இந்நூலுள் தோன்றும் பொருநன் போர்க்களம் பாடுபவன். பரிசில் பெற்ற பொருநன் அது பெறக் கருதும் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதால் இந்நூல் பொருநராற்றுப்படை என்னும் பெயர் பெறுவதாயிற்று.

காவிரியாற்றின் மேன்மையை இந்நூலுள் காணலாம். இதில் வரும் விறலியின் தோற்றப்பொலிவை அடி முதல் முடிவரை வருணிக்கின்றார் ஆசிரியர். இவ்விறலியின் கையில் திகழும் யாழ் பண்டைத் தமிழரின் இசைப்புலமையைக் காட்டும்.

### சிறுபாணாற்றுப்படை

இது 269 அடிகளைக் கொண்டது. இப்பாடலை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார். இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் எனப் பாணர் மூவகைப்படுவர். இப்பாட்டில் வரும் பாணன் யாழ்ப்பாணனாவான். இவன் சிறிய யாழை யுடையவன். அதனால் இப்பாட்டு இப்பெயர் பெற்றது என்பர்.

விறலியின் வருணனை, முடியுடை மூவேந்தரின் தலைநகரப் பெருமை முதலியவை இப்பாடல் புலப்படுத்தும் செய்திகளாகும்.

பாணனின் வறுமைக் காட்சி நெஞ்சை உருக்குவதாகும்.

அழகிய உவமைகளை அமைத்துப் பாடுவதில் புலவர் மிகச் சிறந்து விளங்குகிறார்.

### பெரும்பாணாற்றுப்படை

இதன் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் ஆவார். இப்பாட்டு 500 அடிகளைக் கொண்டதாகும். இதில் வரும் பாணன் கையில் உள்ளது பேரியாழ் என்பதாகும். இதனாலோ அல்லது பாட்டின் அளவாலோ இந்நூல் இப்பெயர் பெற்றது என்பர்.

தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்று வரும் பாணன் ஒருவன். பரிசில் பெறக் கருதும் பாணன் ஒருவனைச் சந்தித்து அவனைத் தொண்டைமானிடம் ஆற்றுப்படுத்துகிறான். அவ்வாறு ஆற்றுப்படுத்தும்போது இளந்திரையனுடைய நாட்டுச் சிறப்புக் கூறப்படுகிறது. அந்நாட்டில் ஆறலை கள்வர் இல்லை; இடியும் சார்ந்தாரைத் துன்புறுத்துவதில்லை. அரவும் ஆளைத் தீண்டாது; தீய விலங்குகள் இல்லை. இளந்திரையனின் ஆட்சி அப்படிப்பட்ட சிறப்புடையது என இந்நூல் கூறுகிறது.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் அழகிய சிறந்த உவமைகளை ஆங்காங்குப் பொருத்தமுற அமைத்துள்ளார். பாணன் கையில் ஏந்திய யாழ் நரம்பு நெகிழ்ந்தும் இறுகியும் தோன்றும் தோற்றமானது. பாணனுடைய மனைவியின் கையில் நெகிழ்ந்தும் இறுகியும் உள்ள வளையலைப் போல அமைந்துள்ளது என்கிறார். தொண்டைமானின் மறுவற்ற சிறப்பிற்கு, மாசற்ற தூய வலம்புரிச் சங்கு உவமை கூறப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தின் புகழ் மணத்திற்குப் பலாப்பழத்தின் மணம் உவமையாகத் தரப்பட்டுள்ளது. சிறந்த நூலாடையின் நுண்மைக்குப் பாலாவியன் நுண்மை உவமையாகிறது. இவ்வாறாக இப்பாடலில் சிறந்த பல உவமைகளைக் காணலாம்.

## மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் இந்நூலைப் பாடியுள்ளார். இப்பாட்டு 583 அடிகளை உடையது. மலையை யானையாகவும் அதனிடத்து உண்டாகும் ஓசையை யானையிடத்துத் தோன்றும் முழக்கமாகவும் உருவகித்தால் இப்பாட்டுக்கு மலைபடுகடாம் எனும்பெயர் பெற்றது. பத்துப்பாட்டுள் மதுரைக் காஞ்சிக்கு அடுத்து இரண்டாவது பெரிய பாட்டு இது. இப்பாடலில் எல்லாச் செய்தி களையும் முதலில் தொகுத்துக் கூறிப்பிறகு விரித்துக் கூறுகிறார் ஆசிரியர்.

ஐவகை நில மக்களின் வாழ்க்கை முறைகள், நன்னனின் சிறப்பி யல்புகள், பக்கமலையில் எழும் பல்வகை ஒலிகள், இசைக்கருவிகள் முதலியன இந்நூலுள் எழில் மிகக் கூறப்பட்டுள்ளன. நன்னனின் நவிர மலையில் எப்போதும் ஆரவாரம் எழும். ஒரு புறம் யானை பிடிப்போர் எழுப்பும் ஒலியும், மற்றொரு புறம் வயப்புலியால்

தாக்குண்ட மறவர் புண்ணை ஆற்ற அவர் தம் மனைவியர் பாடும் பாட்டொலியும், தினை குற்றும் மகளிர் வள்ளைப் பாட்டொலியும், பறையொலியும் சேர்ந்து பேராரவாரமாக ஒலிக்கும்.

வளம் மிக்க நவிரமலைத் தலைவன் நன்னன், பாணர்க்குப் பொற்றாமரை மலரையும், பொன்னணிகளையும் வழங்குவான். அவற்றைப் பெற்றுத் திரும்பும் பாணர், பல பொருளையும் கொண்டு மலைமுகடுகளிலிருந்தும் இழிந்துவரும் ஆறுபோலச் செல்வர்.

உவமை நயம் மிக்கது இந்நூல். அவரைப் பூக்கள் தயிரைத் தெளித்தது போல் விளங்கும், வழியில் பெருங் கற்கள் எருமை படுத்திருப்பதைப்போல் தோன்றும் முழவு போலப் பலாப்பழம் காட்சியளிக்கும் என்பன போன்ற உவமைகளை இப்பாட்டில் கண்டு மகிழலாம்.

தூம்பு எனப்படும் நெடுவங்கியம், மத்தளம், கிணை, சிறுபறை, கஞ்சதாளம், குழல், யாழ் போன்ற இசைக் கருவிகளை இந்நூலுள் காணலாம்.

### முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டில் மிகச்சிறிய இப்பாட்டு 103 அடிகளால் ஆனது. இதனைப் பாடியவர் நப்பூதனார்.

கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் பிரிந்த தலைவன் வரும்வரை, தலைவி ஆற்றியிருக்கும் இயல்பு இப்பாட்டில் எழிலோவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் நெடிய காட்டிடத்துப் பாசறை அமைத்துப் போர்க் கடமை ஆற்ற அங்குத் தங்கியிருக்கி றான். மெய்காப்பாளர் தலைவனைச் சூழ்ந்திருக்க, மகளிர் விளக்கேற்றித் திரிகின்றனர். தலைவனோ நள்ளிரவிலும் தூங்காமல் இருக்கிறாள். போரில் புண்பட்ட யானை களையும் புகமுடம்பு எய்திய வீரர்களையும் நினைந்து விம்மிதம் அடைகிறான்.

தலைவனை நினைந்து ஏங்கும் தலைவி கைவளை நெகிழ மெலிந்துள்ளாள். அவள் உறக்கம் கொள்ளவில்லை. துன்புறும் அவள் காதுகளில் தலைவனின் தேர்வரும் ஓசை விழுகிறது. தலைவன்

வினை முடித்துத் திரும்பிவிட்டான் என்ற செய்தியையும், தலைவியின் இன்பத்தையும் மிக நுணுக்கமாகக் காட்டிப் பாட்டு முடிகிறது.

### மதுரைக்காஞ்சி

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழி யனை மாங்குடி மருதனார் பாடியது. இந்நூலே பத்துப்பாட்டில் மிகப்பெரிய பாட்டு இது 782 அடிகளையுடையது.

பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரத்தையும் கொடையையும் விளக்கி, அவன் ஞாயிறு போலவும் திங்கள் போலவும் காட்சியளிக்க வேண்டும் எனப் புலவர் வாழ்த்துப் பாட்டில் சுவை நலம் கனிந்த பகுதியாகும்.

மதுரை மாநகரில் அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரை நடை பெறும் நிகழ்ச்சிகளை இந்நூல் வரிசையாய் கூறுகிறது.

### நெடுநல்வாடை

திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் இதனையும் ஆக்கியுள் ளார். மதுரைக்காஞ்சியின் தலைவனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனே இதன் பாட்டுடைத் தலைவனாவான். நீண்ட நல்ல வாடையைப் பாடும் பாட்டு இது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பந்தரும் நெடுவாடையாகவும், வினை முடிக்கச் சென்ற தலைவனுக்கு இது நல்வாடையாகவும் தோன்றுதலால் இது நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது.

### குறிஞ்சிப்பாட்டு

இதன் ஆசிரியர் கபிலர் ஆவார். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிக்கும் பொருட்டு இதனைப் பாடினார் புலவர். இந்நூல் களவொழுக்கம் பற்றிக் கூறுகிறது. இப்பாடல் 261 அடிகளைக் கொண்டது.

“குறிஞ்சிக்கோர் கபிலன்” என்ற உண்மையுரையை இந்நூல் கற்போர் நன்கு உணர்வர். இப்பாடலில் 99 வகை மலர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

**பட்டினப்பாலை**

பெரும்பாணாற்றுப் படையைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் இதனைப் பாடியுள்ளார். இப்பாட்டு 301 அடிகளைக் கொண்டது. இவ்வகப் பாட்டில் கரிகாற் பெருவளத்தான் உவமை வாயிலாகப் பாடப் பெற்றுள்ளான். இப்பாடலைப் பாடியதற்காக உருத்திரங் கண்ணனார் பதினாறு நூறாயிரம் பொற்காசுகளைப் பரிசாகப் பெற்றார்.

●●●